**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 24.02.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 36°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 23°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 09°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தை (1.3 மி.மீ அளவு மழை கிடைத்தது) தவிர மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (24.02.2016 முதல் 28.02.2016)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 32 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ பகல்நேர மற்றும் இரவுநேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால், நடவு செய்யப்பட்ட நவரைப் பருவ நெல் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சி வர வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு பாஸ்போமிடான் **(Phosphomidon)** 40 எஸ் எல் என்னும் மருந்தினை 600 மிலி அளவு 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தொடரும் வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு, 60 நாட்கள் வயதுடைய முன்பருவ மற்றும் 30 நாட்கள் வயதுடைய மத்திய கால கரும்பு பயிருக்கு ஒரு எக்டருக்கு 91 கிலோ தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரத்தினை மேலுரமாக இட்டு நீர் பாசனம் செய்யவும்.
- ✓ வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் மஞ்சள் கிழங்கினை பதப்படுத்தி சந்தைப்படுத்தவும்.

- ✓ வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் **(TANUVAS smart)** தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். மேலும் சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும்.
- ✓ பகல் வெப்பநிலை மற்றும் காலை நேரக் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாலும் கால்நடைகளுக்கு வரக்கூடிய சப்பை நோயைக் கட்டுப்படுத்த 1.3.16 முதல் 31.3.16 வரை தடுப்பூசி கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் போட இருப்பதால் கிராம கால்நடை மருத்துவரை உடன் அணுகவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3கி.மீ முதல் 15கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள தாளடி நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- ✓ பூக்கும் நிலையில் உள்ள நெல் தரிசு பயிறுவகைகளுக்கு பண்ணைக்குட்டை அல்லது தண்ணீர் வசதி உள்ள இடங்களில் நீர்த் தெளிப்பான் மூலம் நீர் தெளிக்கவும்.
- ✓ போதிய மண் ஈரம் இருப்பின் நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் பூக்கும் தருணத்தில் இலைவழி தெளிப்பாக பயறு அதிசயம் ஏக்கருக்கு 2 கிலோ அல்லது டி.ஏ.பி கரைசல் 20 கிராம் / லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்திலும் 15 நாட்கள் இடைவெளியிலும் தெளிக்கவும்.
- ✓ மானாவாரி நிலக்கடலையில் காய் பிடிக்கும் திறனை அதிகரிக்க ஜிப்சம் (Gypsum) 160 கிலோ/ ஏக்கர் 40 முதல் 60 நாட்களுக்குள் மண்ணீன் ஈரப்பதத்தை பொறுத்து இட வேண்டும
- ✓ மாசி பட்டத்தில் எள் விதைப்பதற்கு திண்டிவனம் 4, திண்டிவனம் 6 மற்றும் விருத்தாசலம் 1 ரகங்கள் ஏற்றவை. விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி (***Trichoderma viridi***) கலந்து விதைக்கவும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 43 முதல் 96 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2கி.மீ முதல் 16கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் செய்யவும். நட்ட 210 - ம் நாள் வரை சொட்டு உர நீர்ப்பாசனம் அளிக்கலாம். ஒவ்வொரு முறையும் சொட்டு உர நீர்ப்பாசனம் அளிக்கும் போது 25 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் யூரியா மற்றும் வெள்ளை பொட்டாஷ் மூலமாக அளிக்கவும்.
- ✓ மாசிப்பட்டத்தில் விதைக்கப்படும் வெண்டையில் களைகளை திறம்பட மேலாண்மை செய்ய களை முளைத்து வெளிவருவதற்கு முன்பு இடப்படும் களைக்கொல்லிகளான ஆக்ஸிபுளோர்பென்

**(Oxyfluorfen)** *0.15 கிலோ வேதிப்பொருள் / எக்டர் அல்லது புளூகுளோரலின்* **(Fluchloralin) 1** *கிலோ வேதிப்பொருள் / எக்டர் என்ற அளவில் விதைத்த 3ம் நாள் மண்ணில் நல்ல ஈரம் இருக்கும்போது தெளிக்கவும்.*

- ✓ *வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு மரம் ஒன்றுக்கு 8- 10 லிட்டர் தண்ணீரை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும்.*

**4. தெற்கு மண்டலம் -2**

*வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை புதுக்கோட்டை மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 67 முதல் 85 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6கி.மீ முதல் 15 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *அடுத்த ஐந்து நாட்களுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் வறண்ட வானியே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.*
- ✓ *நிலவும் அதிக பட்ச வெப்பநிலையை கருத்தில் கொண்டு சாகுபடியிலுள்ள காய்கறிப்பயிர்களுக்கு மண் ஈரத்திற்கேற்ப உடனுக்குடன் நீர் பாசனம் செய்யவும்.*
- ✓ *ஐந்து மாதத்திற்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு அதிக காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுவதால் முட்டு கொடுக்கவும்.*

**5. மலைப்பிரதேச மண்டலம்**

*வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானியே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரம் மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 முதல் 78 ஆகவும் சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *காபி தோட்டத்தில், கீழே விழும் பழங்களை அப்புறப்படுத்தல் மற்றும் அறுவடை கால முடிவில் மீதமின்றி முழுவதுமாக அறுவடை செய்வதன் மூலம் காபி பழத்துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.*
- ✓ *கோடைகாலத்தில் கேரட், பீன்ஸ் மற்றும் கோஸ் பயிர்களுக்கு நிலவும் வெப்பநிலையை கருத்தில் கொண்டு மூடாக்கு அளிக்கவும்.*

**6. வடமேற்கு மண்டலம்**

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 78 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 2கி.மீ முதல் 3கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *பகல் வெப்பம் உயரும் என்பதால் கோழிகளில் குறிப்பாக அதிக எடை கொண்ட முட்டை மற்றும் கறிக்கோழிகளில் வெப்ப அயற்ச்சியால் இறப்பு நேரிட வாய்ப்புள்ளது. ஆதலால் கோழிகளுக்கான தீவனத்தில் வெப்ப அயற்சி நீக்க மருந்துகளான எல்க்ட்ரோலைட்ஸ் எனப்படும் தாது உப்புக்கள் நீரில் வைட்டமின் சியும் கொடுக்க வேண்டும்.*
- ✓ *மேலும் கோழிகளுக்கான குடிநீரில் பகல் முழுவதும் குளிர்ந்த நீராக இருத்தல் மிகவும் அவசியம், ஏனெனில் தேவையான குடிநீர் எடுக்கும் அளவு குறைவதால் இறப்பும், கோழிகளில் எடை குறைபாடு மற்றும் முட்டை உற்பத்திக் குறைபாடு ஆகியவை காணப்படும்,*
- ✓ *பயறு வகை பயிர்களில் பூக்கள் மற்றும் காய்களை துளைத்து சாப்பிடக்கூடிய புழுக்கள் தென்படுவதால் இதனைக் கட்டுப்படுத்த வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லி அல்லது டிரைசோபாஸ்* **(Triazophos)** *மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதமும் கலந்து மாலை நேரங்களில் தெளிக்கவும்,*

**7. வடகிழக்கு மண்டலம்**

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 56 முதல் 87 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 3கி.மீ முதல் 6 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *கோமாரி நோய்க்கான தடுப்பூசி கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவரால் வரும் மார்ச் 1 ம் தேதி முதல் 21 மார்ச் 2016 வரை போடப்படுகிறது. எனவே, கால்நடை பண்ணையாளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் மாடுகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட்டுக் கொள்ளவும்.*
- ✓ *கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதன் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.*

**8. அதிக மழை பெறும் மண்டலம்**

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **33**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23**°செ முதல் **24**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **82** முதல் **85** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு **12** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *அறுவடை செய்யப்பட்ட நெல் தானியத்தை வெய்யிலில் உலர்த்தி சேமித்து வைக்கவும். வெய்யலில் உலர்த்த காலை **9** மணி முதல் **11** மணி வரையிலும் மற்றும் மாலையில் **3** மணி முதல் **5** மணி வரையில் ஏற்ற தருணமாகும்.*
- ✓ *மல்லிகை மொட்டில் மொட்டுப்புழு தாக்குதல் அதிக வெப்பநிலையால் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த **1** லிட்டர் தண்ணீரில் **2** மிலி மோனோகுரோட்டாபாஸ்* **(Monocrotophos)** *கலந்து போதிய மண் ஈரம் இருக்கின்ற போது மாலை வேளையில் தெளிக்கவும்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**